செ.வெ.எண் :444 நாள் : 4.8.2009

# பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா

# மலர்க்குழுக் கூட்டம்

## செய்திக் குறிப்பு

தமிழ்மொழி இன வரலாற்றில் தனிப்பெரும் வளர்ச்சியும், மாற்றமும் நிகழ வழிவகுத்த மேதை பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவைத் தகுந்த முறையில் அரசு கொண்டாடி வருகிறது. ஆற்றல் மிகு எழுத்துகளால் ஆர்வம் பெருக்கும் பேச்சுகளால் அனைவரது உள்ளங்களையும் கொள்ளைகொண்டு ஆட்சிப் பீடம் ஏறிய அண்ணா அவர்கள் ஆற்றிய பணிகளும், சாதனைகளும் வரலாற்றுச் சிறப்புடையவை. தமிழும் தமிழகமும் தலைநிமிர்ந்து வாழத் தன்னை முழுமையாய் ஒப்புவித்துக் கொண்டு வாழ்நாள் முழுதும் அயராது உழைத்த உத்தமர், பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பித்திடவும், விழாவின் இனிய நினைவுகள் என்றென்றும் நெஞ்சில் நிலைத்திடவும், நூற்றாண்டு நிறைவு விழா மலர் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பான பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்களைத் தலைவராகவும், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்களைத் துணைத் தலைவராகவும், தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்களை உறுப்பினர்–செயலராகவும், மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி கருணாநிதி, கவிக்கோ அப்துல் ரகுமான், கவிவேந்தர் கா.வேழவேந்தன், திரு.கயல் தினகரன் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட மலர்க் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இம்மலர் தயாரித்தல் தொடர்பில் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் 2.8.2009 முற்பகல் கூட்டம் நடைபெற்றது துணைத் தலைவர், உறுப்பினர்–செயலர், உறுப்பினர்கள், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.சி.காமராஜ்,இ.ஆ.ப., தமிழ்ப்பல்கலைக் கழக நாடகத் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் மு.இராமசாமி, பதிப்புத்துறை இயக்குநர் திரு.வை.கண்ணபுரக்கண்ணன் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சீர்பெருமக்களின் வாழ்த்துச் செய்திகள், அண்ணாவைப் பற்றிய கவிஞர்களின் கவிதைப் படைப்புகள், அறிஞர்களின் கட்டுரைகள், அண்ணாவின் சில படைப்புகள் உரைகள், பொன்மொழிகள் முதலியனவும், உரிய நிழற்படங்களும் மலரில் இடம்பெறலாம் எனவும், வெளியிடப்பட உள்ள மலர் அண்ணா நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர், ஆய்வு மலர் என இரண்டு பகுதியாக அமையலாம் எனவும், தமிழிலக்கிய ஆய்வில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு அறிஞர்கள், திராவிட இயக்க ஆய்வில் ஈடுபட்டுள்ள அறிஞர்கள் ஆகியோரின் கருத்துக்களும், கட்டுரைகளும் இடம் பெறலாம் எனவும் முடிவு செய்யப்பட்டது. குறைந்த நாட்களே இருப்பதால் பணிகளைக் குழுவினர் பகிர்ந்துகொண்டு விரைந்து முடிப்பது இன்றியமையாதது எனவும் மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள். வரப்பெறும் கவிதைகள், கட்டுரைகள், செய்திகள் முதலியவற்றை உடனுக்குடன் கணினி அச்சிட்டுப் பிழைதிருத்தம் செய்யலாம் என்றும், பணிகள் நிலையை பற்றி ஆய்வு செய்து மேற்கொண்டு ஆவன செய்ய அடுத்த கூட்டத்தினை 14.08.2009 அன்று முற்பகல் கூட்டலாம் என்றும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

[signature]
4/8/09

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம். சென்னை-9

2/2

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்
மற்றும்
அண்ணா நூற்றாண்டு விழா மலர்க்குழு
உறுப்பினர்- செயலர்.